வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – நாராயணசாமி

தேதி 30.11.2024 நேரம் மாலை 6.10 மணி

தலைப்புச் செய்திகள்

தென் மேற்கு வங்க கடலில் நிலை கொண்டுள்ள ஃபெங்கல் புயல் இன்று மாலை அல்லது நள்ளிரவு வாக்கில் புதுச்சேரி அருகே கரையை கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஃபெங்கல் புயலை எதிர்கொள்ள தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

புவனேஷ்வரில் நடைபெறும் அகில இந்திய தலைமை இயக்குநர்கள் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர்கள் மாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்று உரையாற்ற உள்ளார்

வளர்ச்சியடைந்த இந்தியா இனி ஒரு கனவாக இல்லை – சவாலான இலக்காக உள்ளது என குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் தெரிவித்துள்ளார்.

புயல் 1 (17)

தென் மேற்கு வங்க கடலில் நிலை கொண்டுள்ள ஃபெங்கல் புயல் இன்று மாலை அல்லது நள்ளிரவு வாக்கில் புதுச்சேரி அருகே கரையை கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நேற்று நள்ளிரவு முதல் மணிக்கு 15 கிலோ மீட்டர் வேகத்தில் தமிழகம்-புதுச்சேரியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இந்த ஃபெங்கல் புயல் முதலில் இன்று பிற்பகல் கரையை கடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இன்று மாலை கரையை கடக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. புயலால் பலத்த காற்று வீசி வருகிறது. சாலையில் மக்கள் நடமாட்டம் குறைந்துள்ளது. தற்போது இந்த புயல் சென்னைக்கு அருகெ 100 கிலோ மீட்டர் தொலைவிலும், புதுச்சேரிக்கு அருகே 100 கிலோ மீட்டர் தொலைவிலும் மையம் கொண்டுள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. புதுச்சேரியில் புயல்-மழை காரணமாக தாழ்வான பகுதிகளில் மழை நீர் சூழ்ந்துள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அப்பகுதிகளில் உள்ள மக்கள்

பாதுகாப்பான முகாம்களுக்கு மாற்றப்பட்டு, அவர்களுக்கு உணவு, தங்குமிடம் மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. இந்நிலையில், புதுச்சேரியில் இன்றும்-நாளையும் கனமழைக்கான ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. புயல் காரணமாக இன்று சுற்றுலா தலங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

*புயல்* 2 (18)

புயல்-மழை காரணமாக புதுச்சேரி அரசு பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு நேற்று முதல் விடுமுறை அளித்துள்ளது. புதுச்சேரி கடற்கரையில் கடல் அலைகள் தொடர்ந்து சீற்றத்துடன் காணப்படுகிறது. மேலும், அப்பகுதியில் சுற்றுலா பயணிகளும்,பொதுமக்களும் செல்லாத வகையில் தடுப்பு சுவர் அமைத்து போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது. புயல் காரணமாக புதுச்சேரியில் 300 க்கும் மேற்ட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். பெங்கல் புயலை எதிர்கொள்ள அரசும், காவல்துறையும் தயாராக உள்ளதாக முதுநிலை காவல் கண்காணிப்பாளர் திரு கலைவாணன் தெரிவித்துள்ளார். இதனிடையே, கடற்கரை சாலையில் இன்று காலை புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். அவருடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு குலோத்துங்கன் மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர். புயல்-மழை காரணமாக மாவட்ட நிர்வாகம் சார்பில் எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். அதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர், புதுச்சேரியில் புயலை எதிர்கொள்ள தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக தெரிவித்தார். இதேபோல் நல்லவாடு உள்ளிட்ட மீனவ

*புயல்* 3 (17)

கிராமங்களில் சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம் புயல்-மழை குறித்து ஆய்வு மேற்கொண்டார். அவருடன் துணை மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறை உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகள் உடன் சென்றனர். பொது பாதுகாப்பை உறுதி செய்ய 24 மணி நேர கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டுள்ளது. அவசர கால உதவி எண்கள் 112, 1077 மற்றும் வாட்ஸ் அப் எண் 94889 81017 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை, 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும், அங்கு அவர்களுக்கு தேவையான உணவு மற்றும் பிற உதவிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது. புயலை எதிர்கொள்ள 4 ஆயிரம் அரசு

ஊழியர்கள் பணியில் உள்ளதாகவும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது. புயல் கரையை கடக்கும் சமயத்தில் காற்றின் வேகம் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால் மரங்களை வெட்டி அப்புறப்படுத்த பொதுப்பணித்துறை, வனத்துறை, நகராட்சியினர் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

*அகில இந்திய தலைமை இயக்குநர்கள் மாநாடு* (14)

ஒடிசா தலைநகர் புவனேஷ்வரில் இன்று நடைபெறும் அகில இந்திய தலைமை இயக்குநர்கள் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர்கள் மாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்று உரையாற்ற உள்ளார். இந்த மாநாட்டில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல், மத்திய உள்துறை செயலாளர் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமை இயக்குநர்கள் மற்றும் தலைவர்கள் பங்கேற்று உள்ளனர். இந்த மாநாட்டில் உள்நாட்டு பாதுகாப்பு, புதிய குற்றவியல் சட்டங்கள், கடலோர பாதுகாப்பு, சைபர் க்ரைம், மாவோயிஸ்ட் அச்சுறுத்தல், செயற்கை நுண்ணறிவு, ஆளில்லா விமானங்கள் போன்றவை குறித்து விவாதிக்கப்படுகின்றன. மேலும், பயங்கரவாத எதிர்ப்பு யுக்திகள் குறித்தும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்படுகிறது. முன்னதாக, நேற்று இம்மாநாட்டை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தொடங்கி வைத்தார். இந்த மாநாட்டின் போது சிறந்த சேவைக்கான குடியரசு தலைவர் பதக்கமும், வழங்கப்பட்டது.

*தன்கர்* (12)

வளர்ச்சியடைந்த இந்தியா இனி ஒரு கனவாக இல்லை – சவாலான இலக்காக உள்ளது என குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் தெரிவித்துள்ளார். அவர் இன்று காலை புதுடெல்லியில் நடைபெற்ற வளர்ச்சியடைந்த பாரதம் – 3.0 என்ற தலைப்பில் உரையாற்றினார். தேசம் இந்த இலக்கை உறுதியுடன் அடையும் என்றும் அவர் தெரிவித்தார். இந்திய பொருளாதாரம் மற்றும் உள்கட்டமைப்பு, டிஜிட்டல் ஊடுருவல் ஆகியவை உலக வங்கி மற்றும் உலக பொருளாதார மன்றத்தில் பாராட்டப்படுவதாக அவர் தெரிவித்தார். முதலீடுகள் மற்றும் வாய்ப்புகளின் விருப்பமான இடமாக இந்தியா விளங்குகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். இந்த அமைப்பில் வெளிப்படைத் தன்மை அதிகரித்துள்ளதாகவும், குறுகிய காலத்தில் 50 கோடிக்கும் அதிகமான மக்கள் வங்கி அமைப்பில் இணைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

*நிர்லா* (11)

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று பீகார் மாநிலத்தில் உள்ள மதுபானி மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பிரதமரின் ஸ்வா நிதி, விஸ்வகர்மா, முத்ரா, ஸ்டன்ட் அப் இண்டியா, மற்றும் கிசான் கார்டு போன்ற திட்டத்தின் மூலம் சுமார் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு ஆயிரத்து 121 கோடி மதிப்பிலான கடன் அனுமதி கடிதங்கள் மற்றும் கடன்களை இன்று வழங்கினார். முன்னதாக, அவர் கைவினை பொருட்கள், மண்பாண்டங்கள், காளான் மற்றும் பிற வேளாண் பொருட்களை காட்சிப்படுத்திய சுய உதவிக்குழு பெண் உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார். தமது பீகார் பயணத்தின் இறுதி நாளில் அவர் மதுபானி மாவட்டத்தில் உள்ள கைவினைஞர்கள் மற்றும் மதுபானி ஓவியர்கள் மற்றும் பத்மஸ்ரீ விருது பெற்றவர்களுடன் உரையாட உள்ளார்.

*பிரதாப் ராவ் ஜாதவ்* (11)

பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் – ஜன் ஆரோக்கிய யோஜனா திட்டத்தின் கீழ், 70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்காக கடந்த 25 ஆம் தேதி வரை சுமார் 14 லட்சம் ஆயுஷ்மான் வே வந்தனா அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக மக்களவையில் நேற்று மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் எழுத்துபூர்வமாக அளித்த பதிலில், இத்திட்டம் தற்போது 70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட குடிமக்களுக்கு ஆண்டுக்கு 5 லட்சம் வரை இலவச சிகிச்சை பலன்களை வழங்கி வருவதாக தெரிவித்தார். இத்திட்டத்தின் கீழ், 6 கோடி குடும்பங்களை சேர்ந்த சுமார் 4.5 கோடி பயனாளிகள் பயனடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

*கராஷ்டிரா அரசியல்* (8)

மகராஷ்டிராவில் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு ஒரு வார காலம் கடந்துள்ள நிலையில் அங்கு அடுத்த முதலமைச்சரை தேர்வு செய்யும் பணி இன்னும் இறுதி செய்யப்படாமல் உள்ளது. மகாயுதி கூட்டணி தலைவர்கள் மும்பை மற்றும் டெல்லியில் பல கட்ட சந்திப்புகளை தொடர்ந்து நடத்தி வருகின்றனர். இருப்பினும், முடிவுகள் எட்டப்படாத நிலையில், அங்கு, புதிய முதலமைச்சரின் பதவி ஏற்பு விழா அடுத்த மாதம் 5 ஆம் தேதி ஆசாத் மைதானத்தில் நடைபெறும் என்று பாஜக மற்றும் சிவசேனா கட்சிகள் தெரிவித்துள்ளன.

திறன் �ம்பாட்டு திட்டம் (16)

சிறந்த நிர்வாகத்திற்கான தேசிய மையம், தென் கிழக் ஆசியா மற்றும் இந்திய பெருங்கடல் பகுதியில் உள்ள நாடுகளை சேர்ந்த குடிமைப் பணி அதிகாரிகளுக்கான திறன் மேம்பாட்டு திட்டம் தொடர்பான நிகழ்ச்சிகள் நேற்று நிறைவடைந்தன. 2 வார காலம் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், இலங்கை, ஓமன், தான்சானியா, கென்யா, மலேஷியா, கம்போடியா, மாலத்தீவு மற்றும் மியான்மர் ஆகிய நாடுகளை சேர்ந்த அதிகாரிகள் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியின் நிறைவு விழாவில் சிறந்த நிர்வாகத்திற்கான தேசிய மையத்தின் தலைமை இயக்குனர் டாக்டர் சுரேந்திர குமார் பாக்டே, பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடி மின்னனு நிர்வாக நடைமுறைகளில் முன்னோடியாக திகழும் இந்தியாவின் செயல்பாடுகளை எடுத்துரைத்தார். வெளிப்படைத் தன்மை, செயல்திறன் மற்றும் பொது சேவை வழங்கல் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க வகையிலான முன்னேற்றத்திற்கு வழிவகுத்த குறைந்த பட்ச அரசு, அதிகபட்ச நிர்வாகம் என்ற மத்திய அரசின் நிலைப்பாட்டை அவர் சுட்டிக்காட்டினார். கழிவு மேலாண்மை போன்ற முக்கிய பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படுவதன் முக்கிய அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

எயிட்ஸ் தினம் (14)

உலக எயிட்ஸ் தினம் நாளை அனுசரிக்கப்படுகிறது. இத்தினத்தில் எச்ஐவி, எயிட்ஸ் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தப்படுகிறது. மேலும், பெருந்தொற்றுக்கு எதிராக போராடுவதற்கும் இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது. இத்தினம் விழிப்புணர்வை பரப்புவதோடு மட்டும் அல்லாமல், எயிட்ஸ் நோயால் இறந்தவர்களை நினைவு கூர்வதற்கும் கடைபிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான கருப்பொருள் உரிமையின் பாதையில் செல்லுங்கள் – என் உடல் நலம் – என் உரிமை என்பதாகும். எயிட்ஸ் நோய் ஒரு பொது சுகாதார அச்சுறுத்தலாக இருப்பதை வரும் 2030 ஆம் ஆண்டுக்குள் கொண்டு வருவதை நோக்கமாகவும் இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது. இந்தியாவில் தேசிய அளவில் 2.5 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் எச்ஐவி-யுடன் வாழ்ந்து வருவதை கடந்த ஆண்டு அறிக்கை எடுத்துக் காட்டுகிறது. வயது வந்தோருக்கான எச்ஐவி பாதிப்பு 0.2 சதவிகிதமாகவும், வருடாந்திர புதிய எச்ஐவி தொற்று நோய்கள் 66 ஆயிரத்து 400 ஆகவும் மதிப்பிடப் பட்டுள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

தென் மேற்கு வங்க கடலில் நிலை கொண்டுள்ள ஃபெங்கல் புயல் இன்று மாலை அல்லது நள்ளிரவு வாக்கில் புதுச்சேரி அருகே கரையை கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஃபெங்கல் புயலை எதிர்கொள்ள தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

புவனேஷ்வரில் நடைபெறும் அகில இந்திய தலைமை இயக்குநர்கள் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர்கள் மாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்று உரையாற்ற உள்ளார்

வளர்ச்சியடைந்த இந்தியா இனி ஒரு கனவாக இல்லை – சவாலான இலக்காக உள்ளது என குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் தெரிவித்துள்ளார்.